**ஜனவரி – 09**

# TNPSC துளிகள்

- 2020 ஆம் ஆண்டு ஜனவரி 5 அன்று மத்திய மின் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள உஜாலா மற்றும் எல்.இ.டி (ஒளி - உமிழ் இருமுனையம்) தெரு விளக்குகள் தேசிய திட்டம் ஆகியவை தங்களது ஐந்தாவது ஆண்டு நிறைவை அனுசரித்தன.
    - இந்தத் திட்டங்கள் எரிசக்தித் திறன் சேவைகள் (Energy Efficiency Services Limited - EESL) என்ற நிறுவனத்தினால் செயல்படுத்தப் படுகின்றன.
- நியூசிலாந்து கிரிக்கெட் அணியைச் சேர்ந்த கிரிக்கெட் வீரரான லியோ கார்ட்டர் ஒரு ஓவரில் ஆறு சிக்ஸர்களை அடித்த உலகின் ஏழாவது கிரிக்கெட் வீரர் என்ற சாதனையைப் படைத்து, உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.
- ஒரு சிறிய நிதியியல் வங்கியாக மாற்றுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதி பெற்ற நாட்டின் முதலாவது கூட்டுறவு வங்கியாக சிவாலிக் மெர்க்கன்டைல் கூட்டுறவு வங்கி உருவெடுத்துள்ளது.
    - சிவாலிக் எம்சிபி வங்கியின் தலைமையகமானது உத்தரப் பிரதேசத்தின் சஹரன்பூரில் அமைந்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## 7 மாநிலங்களுக்குப் பேரிடர் நிவாரண நிதி

- ஏழு மாநிலங்களுக்கு ரூ. 5,908 கோடி மதிப்பிலான பேரிடர் நிவாரண நிதியை வழங்க இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இதில் கர்நாடகா, உத்தரப் பிரதேசம், அசாம், மத்தியப் பிரதேசம், திரிபுரா, மகாராஷ்டிரா மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியவை அடங்கும்.
- தென்மேற்குப் பருவமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச் சரிவுகளால் இந்த மாநிலங்கள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டன.
- 2020 ஆம் ஆண்டு ஜனவரி 6 அன்று மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு உயர்மட்டக் குழுவானது தேசியப் பேரிடர் மீட்பு நிதியிலிருந்து (National Disaster Respond Fund - NDRF) பேரிடர் நிவாரண நிதி அளிக்கப் படுவதற்கு ஒப்புதல் அளித்தது.

***NDRF பற்றி***

- பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005ன் கீழ் தேசியப் பேரிடர் நிவாரண நிதி நிறுவப் பட்டது.
- NDRF நிதியுடன் சேர்த்து மாநிலப் பேரிடர் நிவாரண நிதி (SDRF) என்ற நிதியும் கூடுதலாக நிறுவப் பட்டுள்ளது.
- இந்த நிதியின் நோக்கம் இயற்கைப் பேரிடர்களிலிருந்து உடனடி நிவாரணம் வழங்குவது மட்டுமேயாகும். பயிர் இழப்பு அல்லது சொத்துகளுக்கு சேதம் ஆகியவற்றுக்கான இழப்பீடாக இந்த நிதி வழங்கப் படுவதில்லை.
- இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (Comptroller and Auditor General of India - CAG) NDRF நிதி குறித்த கணக்குகளைத் தணிக்கை செய்கிறார்.

## கோகோ மாதிரி மீதான பணி- இந்திய இராணுவம்

- இந்திய இராணுவமானது கோகோ (அரசாங்கத்திற்குச் சொந்தமானது மற்றும் ஒப்பந்ததாரரால் செயல்படுத்தப்படுவது) என்ற மாதிரியின் மீதான தனது பணியைத் தொடங்கி உள்ளது.
- இந்த மாதிரியானது இந்திய ராணுவத்தின் பட்டறைகள் மற்றும் ஆயுதக் கிடங்குகளுக்கு நீட்டிக்கப் பட்டுள்ளது.
- இந்திய இராணுவம் எப்போதுமே செயல்படத் தயாராக இருப்பதை இந்தப் பட்டறைகள் உறுதி செய்வதால் இவை முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- போர்த் திறனை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்புச் செலவினங்களை மீண்டும் சமநிலைப் படுத்துவதற்கும் லெப்டினன்ட் ஜெனரல் டிபி. செகாத்கர் (ஓய்வு) குழுவின் பரிந்துரைகளில் ஒன்று கோகோ மாதிரி (GOCO model) ஆகும்.
- கோகோ மாதிரியில், அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தனியார் தொழிற் சாலைகளால் நிர்வகிக்கப்பட இருக்கின்றன.

## NetSCoFAN

- மத்திய சுகாதார அமைச்சரான ஹர்ஷ் வர்தன் நெட்ஸ்கோஃபான் (NetSCoFAN - உணவுப் பாதுகாப்பு மற்றும் பயன்பாட்டு ஊட்டச்சத்துக்கான அறிவியல் ஒத்துழைப்பு அமைப்பு) என்ற ஒரு அமைப்பைத் தொடங்கினார்.
- இது உணவு மற்றும் ஊட்டச்சத்துத் துறையில் பணியாற்றும் ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்களைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.
- NetSCoFAN ஆனது உயிரியல், வேதியியல், ஊட்டச்சத்து & குறியிடல், விலங்குகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகள், தாவரங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகள், நீர் & பானங்கள், உணவுச் சோதனை மற்றும் பாதுகாப்பான மற்றும் நிலையான பொதி கட்டுதல் போன்ற பல்வேறு பகுதிகளில் பணிபுரியும் எட்டு நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது.
- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது எட்டு தலைமை நிறுவனங்களை அடையாளம் கண்டுள்ளது. இந்த நிறுவனங்கள் ஒரு "தயார்நிலை மதிப்பிடுதலை" உருவாக்க இருக்கின்றன. இது அனைத்து விதமான ஆராய்ச்சிப் பணிகள், நிபுணர்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியலைக் கொண்டிருக்கும்.

## மருத்துவ சாதனங்களின் பட்டியல்

- அதிக ஏற்றுமதித் திறன் கொண்ட மருத்துவச் சாதனங்களின் பட்டியலை நிதி ஆயோக் வெளியிட்டுள்ளது.
- இந்தப் பட்டியலானது முன்னுரிமை முறையில் மானியங்களை வழங்குவதற்காக 10 சாதனங்களுடன் வெளியிடப் பட்டுள்ளது.
- இதில் அறுவைச் சிகிச்சை கத்திகள், எலும்பியல் உட்பொருத்திகள், வடிகுழாய்கள், மருந்தேற்றுக் குழல் & ஊசிகள், எக்ஸ்ரே இயந்திரங்கள், இரத்தப் பைகள், எம்ஆர்ஐ இயந்திரங்கள் மற்றும் சிடி ஸ்கேன் ஆகியவை அடங்கும்.
- இந்த மருத்துவச் சாதனங்கள் மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பின் (Central Drugs Standard Control organization - CDSCO) கீழ் நிர்வகிக்கப் படுகின்றன.

### *CDSCO*

- இது மருந்துகள் மற்றும் அழகு சாதனச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்திய மருந்துகள்

மற்றும் மருத்துவச் சாதனங்களுக்கான தேசிய ஒழுங்குமுறை அமைப்பாகும்.

- ❖ இது மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- ❖ இதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது.

## இந்தியத் தரவுத் தொடர்பு செயற்கைக்கோள் அமைப்பு

- ❖ இந்தியத் தரவுத் தொடர்பு செயற்கைக்கோள் அமைப்பு (Indian Data Relay Satellite System - IDRSS) என்ற ஒரு புதிய செயற்கைக் கோள் தொடரை அமைப்பதன் மூலம் விண்வெளியில் இருந்து விண்வெளியில் உள்ளவற்றைக் கண்காணித்தல் மற்றும் இந்தியாவின் விண்வெளிச் சொத்துக்களைத் தொடர்பு கொள்ளுதல் ஆகிய செயல்களுக்கு இந்தியா திட்டமிட்டுள்ளது.
- ❖ இது மற்ற இந்திய செயற்கைக் கோள்களிடம் உள்ள தகவல்களைக் கண்காணிக்கும், அனுப்பும் மற்றும் அவற்றைப் பெறும் பணியை மேற்கொள்ளும் செயற்கைக் கோள்களின் ஒரு தொகுப்பாகும்.
- ❖ 2,000 கிலோ எடை கொண்ட IDRSS செயற்கைக் கோள்கள் ஜிஎஸ்எல்வி விண்கலத்தின் மூலம் 36,000 கி.மீ உயரத்தில் உள்ள புவிசார் சுற்றுவட்டப் பாதையில் செலுத்தப்பட இருக்கின்றன.
- ❖ 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட இருக்கும் ககன்யான் திட்டத்தில் உள்ள உறுப்பினர்கள் இதன் முதல் பயனாளிகளாக இருப்பர். இவர்கள் தங்கள் பயணம் முழுவதும் திட்டக் கட்டுப்பாட்டகத்துடன் முழுமையாகவும் தொடர்ச்சியாகவும் தொடர்பு கொள்ள முடியும்




## ஆதார் நிலை குறித்த அறிக்கை

- ❖ ஆதார் தொடங்கப்பட்டு, தற்பொழுது பத்து ஆண்டுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து ஆதார் நிலை குறித்த ஒரு அறிக்கையானது வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ இந்த அறிக்கையானது இந்தியாவின் ஐடின்சைட் மற்றும் ஓமிடியார் என்ற அமைப்பினால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- ❖ ஆதாரின் 80% பங்கேற்பாளர்கள் ஆதார் ஆனது அரசாங்கத் திட்டங்கள் மற்றும் சேவைகளை விரைவாகச் செயல்படுத்தியதாக உணர்ந்துள்ளார்கள் என்று இந்த

அறிக்கை கூறியுள்ளது.

- ஆதார் தொடங்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகும் ஆதார் ஆனது உலகின் ஒரு மிகப்பெரிய பயோ மெட்ரிக் அடையாள அமைப்பாக விளங்குகின்றது.

*ஆதார்*

- ஆதார் எண் என்பது இந்தியாவில் வசிப்பவர்களுக்கு இந்தியாவின் தனித்துவ அடையாள ஆணையத்தினால் (Unique Identification Authority of India- UIDAI) வழங்கப்படும் ஒரு சரி பார்க்கக் கூடிய பன்னிரண்டு இலக்க தனித்துவ அடையாள எண் ஆகும்.
- இது குடியிருப்பாளரின் மக்கள்தொகை விவரங்கள் மற்றும் உயிர்த்தரவு அல்லது பயோமெட்ரிக் தகவல் ஆகியவற்றுடன் இணைக்கப் பட்டுள்ளது.
- ஆதார் திட்டமானது 2006 ஆம் ஆண்டில் கருத்துருவாக்கம் செய்யப்பட்டு, 2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. UIDAI ஆனது 2009 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்


## கடல் சூழல் அமைப்புகள் குறித்த உலகளாவிய மாநாடு

- கடல் சூழல் அமைப்புகள் தொடர்பான சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்த மூன்றாவது சர்வதேச மாநாடானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கேரளாவில் உள்ள கொச்சியில் நடைபெற இருக்கின்றது.
- இந்த மாநாடானது இந்திய கடல் உயிரியல் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப் படுகின்றது.
- இந்திய கடல் உயிரியல் சங்கமானது 1958 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது ஆசிய - பசிபிக் பிராந்தியத்தில் கடல் அறிவியல் பற்றிய ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்கு உதவுகின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## தொலைதூரத்தில் உள்ள விண்மீன் குழு - EGS77

- நாசாவினால் பகுதியளவு நிதியளிக்கப்பட்ட ஒரு சர்வதேச வானியலாளர் குழுவானது "EGS77" எனப் பெயரிடப்பட்ட ஒரு தொலைதூர விண்மீன் குழுவைக் கண்டறிந்துள்ளது.




- EGS77 ஆனது தொலைதூர, அண்ட மற்றும் பரந்த குறும்பட்டை ஆய்வின் ஒரு பகுதியாக கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கோவாவில் பிறந்த ஒரு விஞ்ஞானியான விட்டல் தில்வி என்பவரின் தலைமையிலான வானியலாளர்கள் குழுவினால் கண்டுபிடிக்கப்

பட்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சிலிக்கா ஏரி வளர்ச்சி ஆணையம்

- 2020 ஆம் ஆண்டில் 1 மில்லியனுக்கும் அதிகமான புலம்பெயர்ந்த பறவைகள் சிலிக்கா ஏரிக்குத் திரண்டு வரும் என்று எதிர்பார்ப்பதாக சிலிக்கா வளர்ச்சி ஆணையம் அறிவித்துள்ளது.
- சிலிக்கா ஏரி ஆனது ஆசியாவின் மிகப்பெரிய உப்பு நீர் ஏரி மற்றும் உலகின் இரண்டாவது மிகப்பெரிய உப்பங்கழி ஆகும்.
- இந்த ஏரியானது இந்தியத் துணைக் கண்டத்தில் குடியேறிய பறவைகளுக்கான மிகப்பெரிய குளிர்கால வாழிடமாகவும் விளங்குகின்றது.
- 1981 ஆம் ஆண்டில் ராம்சார் ஒப்பந்தத்தின் கீழ் சிலிக்கா ஏரியானது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- 1991 ஆம் ஆண்டில் ஒடிசா அரசாங்கத்தின் வன மற்றும் சுற்றுச்சூழல் துறையின் கீழ் சிலிக்கா வளர்ச்சி ஆணையம் உருவாக்கப் பட்டுள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## கமல் சிங் மறைவு

- நாட்டின் முதலாவது மக்களவையின் உறுப்பினரும் முந்தைய டும்ரான் ராஜின் (ஒரு ஜமீன்தாரி மாநிலம்) கடைசி மகாராஜாவுமான கமல் சிங் என்பவர் பீகாரில் உள்ள பக்சார் மாவட்டத்தில் காலமானார்.
- கமல் சிங் என்பவர் 1952 ஆம் ஆண்டில் தனது 25வது வயதில் இந்தியாவின் முதலாவது மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் வயது நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார்.
- இவர் 1962 ஆம் ஆண்டு வரை சுயேட்சையாக லோக் சபாவில் பக்சார் நாடாளுமன்றத் தொகுதியை (பீகார்) பிரதிநிதித்துவப் படுத்தினார்.
- பழமையான ஷாஹாபாத் பகுதியில் உள்ள ஏழைகளுக்கு ஏராளமான கல்விக் கூடங்கள் மற்றும் சுகாதார நிறுவனங்களை அவர் திறந்து வைத்துள்ளார்.



# இதரச் செய்திகள்

## பத்தாண்டுகளின் சொல்

- லூசியானாவின் நியூ ஒர்லியன்ஸில் உள்ள அமெரிக்கப் பேச்சு வழக்கு சமூகத்தைச் சேர்ந்த மொழியியலாளர்கள் “அவர்கள்” (THEY) என்ற சொல்லை “பத்தாண்டுகளின் சொல்லாக” தேர்ந்தெடுத்துள்ளனர்.
- ஆண் அல்லது பெண் பாலினத்துடன் அடையாளம் காண முடியாதவர்களைக் குறிப்பதற்காக “அவர்கள்” என்ற ஒற்றை உச்சரிப்புச் சொல்லானது மூன்றாம் நபர் பன்மைப் பெயராக பயன்படுத்தப் படுகின்றது.
- “அவர்கள்” என்ற சொல்லானது 2015 ஆம் ஆண்டில் “ஆண்டின் சொல்லாகவும்” அறிவிக்கப் பட்டது.
- அமெரிக்கப் பேச்சு வழக்குச் சமூகமானது தற்பொழுது வரை இரண்டு "பத்தாண்டுகளின் சொல்லை" மட்டுமே தேர்ந்தெடுத்துள்ளது. 1990களின் பத்தாண்டிற்கான சொல்லாக "வலை" என்பதையும் 2000களின் பத்தாண்டிற்கான சொல்லாக "கூகிள்" என்பதையும் இந்த அமைப்பு தேர்ந்தெடுத்துள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★